பின்னாலே இதே ஒன்றியத்தில் நடுப்பட்டி, நாயக்கர்பட்டி என்ற ஊரிலும் இந்த வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு கோர்ட்டிலே தடையாணையை வாங்கி கோர்ட்டிலே கேஸ் இருப்பதால், அந்தக் கேஸை வெகு வேகமாக முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். அப்படி அரசாங்கத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கினால் மிக வேகமாக வேலைகள் முடிக்கப்படும்.

குற்றாலம் புது அருவியில் அணைக்கட்டு.

532—(வினா எண். 12071)* **திரு. டி. ஆர். வேங்கடரமணன்**: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குற்றாலம் புதுஅருவியில் அணை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திருநெல்வேலி மாவட்டத்திலே, குற்றாலத்தின் அருகிலே இந்த புது அருவித் திட்டம் என்று சொல்லப்படுகின்ற இந்த அணை கட்டப்படுவதால் அதன் மூலமாக இன்றைக்கு அங்கே காய்ந்து கிடக்கின்ற பல நிலங்கள் எல்லாம் நன்கு வளமாக பயிராகக்கூடிய வாய்ப்பு இருப்பதால், இந்தத் திட்டம் தலைமை என்ஜினியரிடமிருந்து எவ்வளவு நாட்களுக்குள் அரசுக்கு வரும்? இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு என்ன? பலன் பெறும் ஆயக்கட்டுகள் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 28]

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு ஆய்வு செய்து முடிந்த பிறகுதான் சரியான மதிப்பீட்டைச் சொல்ல முடியும். இந்த அணை கட்டுவோம் என்று சொன்னால், வருடத்திற்கு 105 மில்லியன் கன அடி நீரைப் பயன்படுத்த முடியும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதே போன்று, இந்தத் திட்டத்தினால் 910 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதியும், 839 இடைவெளி நிலங்களுக்கு பாசன வசதியும் கிடைக்கும் என்ற குறிப்பு இங்கே இருக்கிறது. வேகமாக ஆய்வை முடிப்பதற்கு வேண்டிய அந்த முயற்சியை மேற்கொள்ள அதிகாரிகளுக்குச் சொல்லி இருக்கிறோம்.

திரு. டி. ஆர். வேங்கடராமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தென்காசி தொகுதியில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையும் இருக்கிறது. இப்போது புதிய தேசிய நீர் வளத் திட்டத்தின் அடிப்படையில் எந்த ஒரு புதிய அணை கட்டினாலும் அதிலே 15 சதவிகிதம் தண்ணீரைக் குடிநீருக்காக உபயோகிக்கவேண்டும் என்று தேசிய அளவில் ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இந்தத் திட்டத்தின் மூலமாக அந்தப் பகுதியிலே குடிநீருக்கு வாய்ப்பு ஏற்படுமா? அப்படி என்றால், அதன் மூலமாக எத்தனை இலட்சம் மக்கள் பயன்படுவதற்காக திட்டத்திலே வரையறுக்கப் பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே இப்போது குடிநீருக்காக எந்தக் குறிப்பும் இல்லை. அப்படி கோரிக்கை வருமென்று சொன்னால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம் பேராம்பூர் பெரியகுள பாசன வாய்க்கால்.

533—(* வினா எண். 12364) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—